**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண். 189/2025**

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08ம் நாள் புதன் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 திரு.S.குமார் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர் :** | **விஜயா** | **தொழில் :** | வீட்டு குடித்தனம் |
| கணவர் **பெயர் :** | **ராமசெல்வம்** | **சமயம் :** | – |
| **ஊர் :** | அத்திவெட்டி | **வயது** | 46 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**08.04.2026**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதியின் கார்டியன் ஆவேன், வாதி என் மகள். அவர் வாய் பேசாதவர் ஆவார். நான் எனது முதன்மை சாட்சியத்தை வாதிக்கு சார்பாகவும் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக கடந்த 20.05.2025 தேதியிட்ட வாதியின் கணவர் சக்திவேல் கணினி இறப்பு சான்று **வா.சா.ஆ.1** ஆக குறியிடுகிறேன். 03.06.2025 ல் சக்திவேல் கணினி வாரிசு சான்றிதழ் **வா.சா.ஆ.2** ஆக குறியிடுகிறேன்.30.07.2025 ல் வாதி தரப்பில் கோட்டாட்சியரிடம் கொடுத்த மேல்முறையீடு அலுவலக நகல் **வா.சா.ஆ.3**ஆக குறியிடுகிறேன். 31.07.2025 ல் கோட்டாட்சியர் அலுவலக அலுவலர் கையொப்பமிட்ட அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.4** ஆக குறியிடுகிறேன். 08.08.2025 ல் கோட்டாட்சியர் அலுவலக மேலெழுத்து கடிதம் அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியிடுகிறேன்.வாதியின் ஆதார் அட்டை நகல்(அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது.) **வா.சா.ஆ.6**

ஆக குறியிடுகிறேன். என் பெயரிலுள்ள ஆதார் அட்டை நகல்(அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது.) **வா.சா.ஆ.7** ஆக குறியிடுகிறேன். எனது மகளின் அடையாள அட்டை(Deaf and dumb) நகல் (அசலுடன் ஒப்பிட்டு குறியிடப்படுகிறது.) **வா.சா.ஆ.8** ஆக குறியிடுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சக்திவேல் அம்மா பெயர் பேபி கமலா. அவரின் அப்பா பெயர் சௌந்தர்ராஜன். 03.06.2025 ல் இறந்த சக்திவேலுவிற்கு அவருடைய அப்பா, அம்மா மற்றும் அவருடைய மனைவி சத்யா வாரிசுகள் என்று வாரிசு சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இறந்த சக்திவேலுவிற்கு அவருடைய அம்மாவும், மனைவி சத்யா மட்டும்தான் வாரிசுகன் என்பது எங்கள் கட்சி என்றால் ஆமாம். தற்போது சக்திவேலின் அப்பா உயிருடன் உள்ளார். அம்மா தவறிவிட்டார். அதனால் சத்யா மட்டும்தான் சக்திவேலுக்கு வாரிசு என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். 2,3 பிரதிவாதிகளை பொறுத்து எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்பதால் அவர்களை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.